# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2024 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, கம்பனிகள் (திருத்தச்) சட்டம்

---

[*2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2024, ஏப்பிறல் மாதம் 05 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## 2024 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, கம்பனிகள் (திருத்தச்) சட்டம்

[2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

**ச.வ.ஓ 68/2017**

### 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக : -

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்*

**1.** (1) இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, கம்பனிகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இப்பிரிவின் ஏற்பாடுகள் தவிர்ந்த, இச்சட்டத்தின் ஏற்பாடுகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகள் பாராளுமன்றத்தில் எத்தேதியன்று சட்டமூலம் சட்டமாக வருகின்றதோ அத்தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கச் சட்டத்தின் 427 ஆம் பிரிவினைத் திருத்துதல்*

**2.** (இச்சட்டத்தில், "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 427 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "(117 ஆம் அத்தியாயமான) ஆவணங்கள் பதிவுக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு" எனும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2024 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 428 ஆம் பிரிவினைத் திருத்துதல்*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 428 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "(117 ஆம் அத்தியாயமான) ஆவணங்கள் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அது விற்பனை உண்டியல் என்றவாறாக பதிவு செய்யப்படுதல் வேண்டும்" என்னும்

சொற்களில் இருந்து அவ் உட்பிரிவின் முடிவு வரையான எல்லாச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “2024 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்தின்கீழ் அது விற்பனை உண்டியல் என்றவாறாக பதிவு செய்யப்படுதல் வேண்டும். அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய மிதக்கும் தாக்கீடு தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவினை நீக்குவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 431 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 431 ஆம் பிரிவானது அப் பிரிவின் (6) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவினை சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

“(7) கம்பனி ஒன்றினால் சொந்தமாக்கப் பட்ட ஏதேனும் அசையும் ஆதனம் 2024 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கின்றதான மிதக்கும் தாக்கீடொன்றிற்கு அமைவாக உள்ள விடத்து, அச்சட்டத்தில் அடங்கியுள்ள முன்னுரிமை தொடர்பான ஏற்பாடுகள் அத்தகைய மிதக்கும் தாக்கீடொன்றின் முன்னுரிமையைத் தீர்மானிப்பதில் ஏற்புடையதாதல் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 433 அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 433 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத் தப்படுகின்றது என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 433 அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும் : -

“பொருள் கோடல்

433அ. இச்சட்டத்தின் இப்பாகத்தில் “மிதக்கும் தாக்கீடு” என்னும் சொற்பதம் 2024 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின்

ஏற்புடைமையின் நோக்கத்திற்கான "பிணைப் பொறுப்பு உரிமை" ஒன்று எனப்பொருள்படும்.".

**6**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*